**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 173-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : இந்திராணி | Defence | : |
| Father/Husband Name | : மணி | Court | : |
| Village | : சாத்தனூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 60/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 27.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 30.08.2023ம் தேதி நான் வீட்டில் இருந்த போது எனக்கு போன் மூலம் எனது மகன் ரஜினி ராமன் கோட்டம் என்ற இடத்தில் சாலை விபத்தில் அடிப்பட்டு இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைந்தது. அதன் பின்னர் சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தபோது வண்டியும் எனது மகனும் சம்பவ இடத்திலேயே கிடந்தனர். அதன் பின் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை எனது ஊரிலேயே ஊர்காரர்கள் எழுதினார்கள் என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு யார் போன் மூலம் தகவல் கூறினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் மகனுக்கு ஏற்பட்ட விபத்திற்கு நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 173-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW 2 | Examined as : | PW 2 |
| Name | : முரளி | Defence | : |
| Father/Husband Name | : முனுசாமி | Court | : |
| Village | : மேமாத்தூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 38/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 27.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.08.2023ம் தேதி நான் கோட்டுச்சேரியில் வேலை செய்துகொண்டிருந்தேன். அப்போது எனது மேஸ்திரி எனக்கு போன் செய்து என்னுடன் வேலை பார்க்கும் ரஜினிக்கு திருக்கடையூரிலிருந்து கீழ்மாத்துார் செல்லும் சாலையில் தமிழ் செல்வன் என்பவரது வயலுக்கு அருகில் விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அவருக்கு தலையில் பலத்த அடிப்பட்டு ரஜினி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர் ரஜினியின் ஊர்காரர்கள் வந்தவுடன் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மேஸ்திரி எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன 45 நிமிடங்கள் கழித்து தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள என்றால் இல்லை.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 173-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW 4 | Examined as : | PW 3 |
| Name | : மனோகரன் | Defence | : |
| Father/Husband Name | : ராமதாஸ் | Court | : |
| Village | : கிள்ளயூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 62/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 27.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 31.08.2023ம் தேதி நான் காலை 07.30 மணியளவில் கடைக்கு சென்றுகொண்டிருந்தேன். அப்போது ராம கோட்டம் மெயின்ரோட்டில் செந்தமிழ் வயல் அருகில் முதல் நாள் நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் என்னிடமும் ஜோதி என்பவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.